தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## அலுவலக உதவியாளர் — பதவிகளின் எண்ணிக்கை: 03

சேவைப் பிரிவு: **PL 1**

## பதவியின் தன்மை

- அலுவலகத்தின் உள்ளக மற்றும் வெளியக வளாகத்தைச் சுத்தமாகவும் சுகாதாரமான முறையிலும் பேணிப் பாதுகாப்பதற்குரிய அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றல்.
- நிறுவனத்தின் திறவுகோல் சேவை தொடர்பான கடமைகள் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிரிவுகளைத் திறத்தல் மற்றும் மூடுதல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்.
- பிரிவுகளுக்கு இடையில் உத்தியோகபூர்வ கடிதங்கள், ஆவணக் கோப்புகள் மற்றும் புத்தகங்கள் போன்றவற்றை எடுத்துச் செல்லும் செயற்பாடுகள் மற்றும் பிரிவுகளுக்குத் தேவையான களஞ்சியப் பொருட்களைக் கொண்டுவரும் பணியை நிறைவேற்றல்.
- தபால் தொடர்பான செயற்பாடுகளை நிறைவேற்றல்.
- பணியாட்டொகுதியின் உத்தியோகபூர்வ கடமை நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு ஒத்துழைத்தல்.
- பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் அதிகாரி/ அதிகாரிகளினால் நிறுவனத்தின் சேவைத் தேவைக்கு ஏற்ப ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றல்.

## தகைமைகள்

கல்வித் பொதுத் தராதரச் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்.

## வயதெல்லை

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## சம்பள அளவுத்திட்டம்

**PL 1 - 2025 ரூ.** (**40,500 - 10 x 450 - 10 x 490 - 7 x 540 - 15 x 590 - 62,530**)

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)